**புத்தள பிரதேச சபை - 2023**

**-------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தள பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு உரித்தல்லாத ரூபா 1,500,000 பெறுமதியான 03 கட்டிடங்கள் சபையின் காணி மட்டும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபையிடம் உள்ள அனைத்து சொத்துக்களும் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | கோன்கட்டிய சனசமூக மண்டபம் அமைந்துள்ள காணியினை மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,000,000 தொகை இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | மஹகொடயாய கொம்போஸ்ட் பிரிவிற்கு பொருத்தப்பட்ட சூரிய முறையின் பெறுமதி ரூபா 161,250 மற்றும் பிரதேச சபைக்கு சொந்தமான வாகனங்களுக்காக டீசல் வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 18,300 பெறுமதியான எரிபொருள் பம்பி என்பன மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான சகல சொத்துக்களின் பெறுமதிகளும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 3,518,109 பெறுமதியான 03 நிர்மாணங்கள் மற்றும் மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 38,717,046 ஆன நிர்மாணம் ஒன்றின் பெறுமதி மூலதனமக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான சகல சொத்துக்களின் பெறுமதிகளும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நூலகத்திற்காக நன்கொடையாக கிடைத்த ரூபா 73,350 ஆன நூலக புத்தகங்களின் பெறுமதியை மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தில் மூலம் பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் மூலம் பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 41,349,475 தொகை மற்றும் அதிலிருந்து செலவிடப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 41,426,202 தொகை நிதி செயலாற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குரிய அனைத்து வருமானங்களும் செலவினங்களும் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 208,498 கூடுதலாகவும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 619,167 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குரிய அனைத்து வருமானங்களும் சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்பு பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 4,231,942 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை கூற்றில் ரூபா 4,130,263 என ரூபா 101,679 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்குரிய அனைத்து வருமானங்களும் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

**1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் அட்டவணைகளின் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 1,863,177, ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது | 2024 ஆம் ஆண்டின் போது நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இத்தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் சரியாக றாளதுவரையாக்கி இணக்கமிண்மைகளுக்கு காரணங்களைத் தேடி சீராக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 900,305,632 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் மீதி தொடர்பாக தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள, உரித்துறுதி சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | முறையான மதிப்பீடொன்று மேற்கொள்வதற்கும் பயன்படுத்தும் ஆதனங்களை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுத்து கடன் கொடுத்தோர் பதிவேடு நாளாவது வரையாக்கப்பட்டு பேணி செல்வதற்கு விடய உத்தியோகத்தரிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களில் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிகக்ப்பட வேண்டும். |

**1.7 இணக்கமிண்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 19(xii) ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான கடைத்தொகுதியில் 15 கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக | நீண்ட காலமாக குத்தகைக்கு வழங்குவதற்கான விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | 24(1) (அ) பிரிவு | சபைக்குரிய வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் உரிய அறிவித்தல்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் வீதி பதிவேட்டின் பிரகாரம் சபைக்கு உரிய 202 ஒழுங்கைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | இனங்காணப்பட்ட பொது வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் என்பனவற்றை வர்த்தமானியில் வெளியிடுவதற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | வீதிப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,275,723 ஆன 09 மீதிகள் தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 83(1) ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த 74 கட்டிட திட்டங்களைப் பரீட்சித்து இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை. | இணக்க சான்றிதழ் பெற்றுக் கொள்ளாத கட்டிடங்கள் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் வெளிக்கல பரிசோதனை ஒன்று மேற்கொள்வதாக | சபை பிரதேசத்தில் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்கள் ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 10 வாகனங்களில் அரசின் இலட்சிணை பொறிக்கப்பட்டிருக்க வில்லை. | சபையிடமுள்ள சகல வாகனங்களிலும் இயந்திரங்களிலும் அரசின் இலட்சிணை பொறிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| (உ) | 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை | சபையினால் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாதிருந் ததுடன் வீதி விளக்குகள் வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட இருக்கவில்லை | வீதி விளக்குகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதற்கும் இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளவும் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சிறிய உழவு இயந்திரம் 07 ஆண்டுகளாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அதனை திருத்துவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | இந்த உழவு இயந்திரத்தை திருத்துவதற்கு தேவையான பரிந்துரைகளை பெற்றுக் கொள்வதற்காக மாகாண இயந்திர பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2017 மார்ச் 10 ஆம் திகதிய 2017/01 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் உள்ளக சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரின் முன் அங்கீகாரம் இன்றி சபைக்குரிய 07 வாகனங்கள் அதிகார பிரதேசத்தின் வெளியே கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன | எதிர்காலத்தில் கடமைகளுக்காக ஈடுபடுவதற்கு முன்னர் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான 17 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**02. <u>நிதி மீளாய்வு</u>**

**2.1 <u>நிதி விளைவுகள்</u>**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,687,703 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,098,689 ஆக இருந்தது.

**2.2 <u>வருமான நிர்வாகம்</u>**

**2.2.1 <u>மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்</u>**

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | | 2023 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,248,067 | 3,394,049 | 4,140,316 | 4,253,733 | 2,191,067 | 2,183,916 | 2,247,344 | - |
| (ii) | வாடகை | 66,344,000 | 9,662,650 | 7,259,825 | 2,402,825 | 6,604,400 | 9,734,116 | 6,242,250 | 3,491,866 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,381,000 | 1,571,796 | 1,703,796 | (132,000) | 2,000,000 | 1,956,545 | 1,956,545 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 68,319,000 | 43,078,107 | 34,590,953 | 8,487,154 | 14,374,000 | 24,637,080 | 14,733,051 | 9,903,129 |
| | | 143,292,067 | 57,706,602 | 47,694,890 | 15,011,712 | 25,169,467 | 38,511,657 | 25,179,190 | 13,394,995 |

### 2.2.2 <u>வருமான சேகரிப்பின் செயலாற்றல்</u>

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 8,139,981 ஆன வீத வரி வருமானத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,917,397 அதாவது 48 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.. | 2024 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக˙ | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 2,577,374 ஆன நிலுவை வீதவரி வருமானத்தில் ஆண்டில் ரூபா 1,737,389 அதாவது 67 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் நிலுவை வருமான அறவீடு மந்தகெதியில் உள்ளுத | 2024 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக˙ | நிலுவை வீத வரி விரைவில் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1989 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சபைக்கு சொந்தமான ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 854,403 ஆன வாடகை வருமானம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக˙ | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2022 நவம்பர் 18 ஆம் திகதிய 2307 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் கழிவு சோதனை தொடர்பாக உப உறுப்புரைங்கில் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதும் 2023 ஆம் ஆண்டுக்காக 02 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் கழிவுகளுக்கான கட்டணங்கள் அறுவிடப்பட்டிருந்த போதும் அறவிடப்பட வேண்டிய ஏனைய நிறுவனங்கள் இனங் காணப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் கட்டணங்களை அறவிடப்பட வேண்டிய ஏனைய நிறுவனங்களை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உப உறுப்புகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 4,791,600 ஆன கடை வாடகை வருமானத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,566,175 அதாவது 54 சதவீதம் அறவிடப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் நிலுவை கடை வாடகையை அறவிட்டுக் கொள்வதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 1,243,,217 ஆன நிலுவை கடை வாடகை வருமானத்தில் ஆண்டின் இறுதி வரை ரூபா 1,030,876 அதாவது 83 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிலுவை வருமான அறவீட்டின் முன்னேற்றம் மந்த கெதியில் உள்ளது | எதிர்காலத்தில் நிலுவை கடை வாடகையை அறவிட்டுக் கொள்வதாக | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும் |

அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குதல் | எதிர்காலத்தில் நிறுவன தலைவரின அலோசணையின் பிரகாரம் இந்நடவவடிக்கைகளை சரி | வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான வழிகாட்டல் கோவையின் 2.5.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திர கட்டணங்கள் மற்றும் வெளிக்கள பரிசோதனை கட்டணங்களாக அறவிடப்படுகின்ற தொகையை செலவு வைப்பதற்காக வேறாக கணக்கொன்று பேணப்பட்டு இருக்கவில்லை. | செய்வதாக | எடுத்தல் வேண்டும். |
| | **ஏனைய வருமானம்** | | |
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 03 நிறுவனங்களுக்குரிய தொடர்பாடல் கோபுரங்களில் இருந்து 2008 ஆம் ஆண்டு மீளாய்வாண்டு வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 150,000 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 - 2923 காலப்பகுதிக்குரிய 876 நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,507,336 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2010 - 2023 காலப்பகுதிக்குரியதாக சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 11,296,080 ஆன நிலுவை இயந்திர வாடகை வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,387,804 தொகையும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 7,715,758 தொகையும் கிடைக்க வேண்டியிருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

2.3 <u>மிகை அறவீடு</u>

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட 06 மிகை அறவீடுகளுக்குரிய ரூபா 559,108 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக் | விரைவில் மிகை அறவீட்டுத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

3.1 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) 2022 ஆம் ஆண்டில் பொருள் பொருள் மெய்மையாய்வின் போது 68 கல்வனைஸ் கொடிக்கம்பங்கள் 18 GI குழாய்கள் சபையிடம் இல்லாதிருப்பதாக இனங காணப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் குறித்த பொருட்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | 2024 ஆம் ஆண்டு பொருள் மெய்மையாய்வின் மூலம் கொடிக் கம்பங்கள் GI குழாய்கள் இல்லை என உறுதிப்படுத்தப்பட்டதால் பொறுப்பான தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறுவிடப்படுவதாக | பொறுப்பான தரப்பினரை இனங் கண்டு உரிய நட்டங்கள் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புத்தள பழைய வியாபார சந்தையில் அமைந்துள்ள 2,11,12 மற்றும் 30 ஆம் இலக்க கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்குரிய குத்தகை உடன்படிக்கை உள்ளடக்கப்பட்டுள்ள கோவைகள் மற்றும் 11, 12 மற்றும் 30 ஆம் இலக்க கடைகளுக்குரிய சபையால் எடுக்கப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட வழக்குக் கோவை சபையிடம் இல்லாத இருந்ததுடன் உரிய கோவைகள் காணாமல் போனமை தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை இந்த கடைகளுக்காக 2008 ஆம் ஆண்டின் பின்னர் கடை வாடகை பட்டியலிடப்பட்டிருக்க வில்லை. | கோவைகள் காணாமல் போனமை தொடர்பாக திணைக்களத் தலைவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதுடன் காணாமல் போனமே தொடர்பாக பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது அங்கீகரிக்கப்படாத 56 கட்டிடத் திட்டங்கள் தொடர்பாக வெளிக்கள பரிசோதனை மேற்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை | தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படுவதாக | அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்படு கின்ற நிர்மாணங்கள் தொடர்பாக ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஈ) | பிரதேச சபைக்கு உரிய 03 காணிகள் 02 நூலகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 52 கடைகளுக்குரிய 2011 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டு வருகின்றது. | புதிய மதிப்பீடு ஒன்று செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | கடையில் வாடகை உரிய காலத்தில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) வீதவரிகள் அறவிடுவதற்குரிய 2004 ஆம் ஆண்டின் போது இறுதியாக மேம்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இனங் காணப்பட்டு இருந்ததுடன் காலரீதியில் முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங் கண்டு வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட எடுக்கவில்லை | எதிர்காலத்தில் மேம்படுத்தப்பட்ட பிரதேசங்களை இனம் கண்டு வீதவரியை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக | உரிய காலத்தில் மேம்படுத்த பிரதேசங்களை இனங் கண்டு வீத வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) சபையினால் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 67 கடைகளின் மாதாந்த வாடகை அடிப்படையில் அறவிடும் போது ஊவ மாகாண சபையின் பிரதான மதிப்பீட்டாளரின் 2018 ஜூலை 24 ஆந் திகதிய எம்லு/ஆர்டீ/498 ஆம் இலக்க மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படா திருந்த காரணத்தினால் 2018 - 2023 காலப்பகுதிக்குரிய ரூபா 27,482,200 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக திணைக்களத் தலைவரின் கள் அறிவுறுத்தலின் பிரகாரம் . நடவடிக்கைகள் எடுப்பதாக | சரியாக மதிப்பீட்டு வடகை அறவிடப்பட . வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தலைவரால் பயன்படுத்தப்பட வேண்டிய 2021 ஜனவரி முதல் 2023 ஜூலை மாதம் வரையான | கெப் வண்டியின் ஓட்டக் குறிப்புக்கள் வேறுபாட்டிற்குரிய ஆரம்ப பரிசோதனை ஒன்று மேற்கொள்ளுமாறு உள்ளூராட்சி | சபை நிதியத்திலிருந்து கூடுதலாக செலவிடப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதிரியதாக ஓட்டத்தில் ஈடுபடுத்தாத 16,230 கிலோ மீற்றருக்காக எரிபொருள் செலவினமமாக ரூபா 709,433.22 தொகை சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மன்ற ஆணையாருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக | எரிபொருள் செலவினத்தை பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) | புத்தள பிரதேச சபையில் சேதனப் பசளை விற்பனை பிரிவில் 2024 மார்ச் 05 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் ரூபா 42,180 ஆன இருப்பு பற்றாக்குறை காணப்பட்டது. | 37 உர பொதிகளுக்காக மேலும் பணம் அறவிடப்பட வேண்டும். | இருப்பு பற்றாக்குறைக்கு உரிய பொறுப்பான தரப்பினர்கள் இனங்கான பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.5 <u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்குரிய 05 வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு பொறுப்பேற்கப்பட்டிருக்க வில்லை | வாகனங்களின் சட்ட ரீதியான உரித்தினை சபைக்கு பொறுப்பேற்க தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதாக | சபைக்குரிய சொந்தமான சொத்துக்களின் உரித்து சட கையேற்கப்பட வேண்டும் |
| (ஆ) | மோட்டார் வாகனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகனமொன்றை பதிவு செய்யாமல் பயன்பாட்டிற்கு முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதும் 3 இயந்திரங்கள் சபைக்கு கிடைத்து 11 ஆண்டுகள் கடந்திருந்த போதும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | பதிவுச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்படி 3.4 (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தின் 25(1) ஆம் பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகனமொன்றை ஓட்டத்தில் ஈடுபடுத்தும் போது செல்லுபடியான வருமான அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த 04 வாகனங்களை ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. போதுமதிக செய்யாமல் பயன்பாட்டிற்கு முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையால் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேடுக்கப்பட்டிருக்க வில்லை | உரிய காலப்பகுதியில் வருமான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு விடய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக நடவடிக்கை எடுப்பதாக | குறித்துரைக்கப்பட்ட திகதியில் வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபைக்குரிய சொந்தமான 05 வாகனங்கள் மற்றம் இயந்திர உபகரணங்கள் 01 ஆண்டு முதல் 17 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்படுவதுடன் குறித்த வாகனங்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | வாகனங்களை உரிய காலப்பகுதியில் திருத்தம் செய்வதற்கு கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------ | ------------------------------------ | ---------------------- |

| | | | |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 06 பதவிகளுக்குரிய 10 ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 02 பதவிகளுக்குரிய 11 ஊழியர்கள் மிகையாக காணப்பட்டனர். | ஊழியர் ஆட்சேர்ப்பு காலம் தாழ்த்தப்படுவதால் பற்றாக்குறை காணப்படுவதாகவும் 2023 வருடாந்த இடமாற்றம் காரணமாக மிகையொன்று ஏற்பட்டுள்ளதாக | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப வேண்டியதுடன் மிகை பதவியணியினை ர அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் |
| (ஆ) | 15 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 106,617 ஆன கடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை | அறவிடப்படாமல் காணப்படும் ஊழியர் கடன் தொடர்பாக திணைக்களத் தலைவரின் அறிவுறுத்தல்களை பெற்று எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | ஊழியர் கடன் மீதிகளை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண் டிற்கான உள்ளக கணக்காய்வு வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் உள்ளக கணக்காய்வு ஒன்றை மேற்கொள்வதாக | சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை உரிய காலத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) பிரிவு மற்றும் 2019 ஜனவரி 12 திகதிய டீஎம்ஏ/01-2019 இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு வழிகாட்டல் | 2024 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வழிகாட்டல்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்களை |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | நடாத்தப்பட வேண்டும். |

### 4.3 <u>பாதீட்டுக் கட்டுப்பாடு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமான மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 08 வருமான விடயங்களில் 195 தவீதம் முதல் 100 வரையிலும் 08 செலவின விடயங்களில் 08 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையான விலகலும் காணப்பட்டன. இதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி யொன்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் முறையாக வருடாந்த பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த பாதீட்டு மதிப்பீடு நடைமுறறச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் அது இலக்குகளை நிறைவேற்றப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும் |

### 4.4 <u>நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக சபையால் அறிந்திருந்த போதும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் குறித்த குறிகாட்டிகளை இனங்காண்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட வேண்டும். |